1992 ஏப்ரல் 24]

625—

நெல் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை அமைத்தல்

* 4324— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி :

மாண்புமிகு ஊரகத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா விடையளிப்பாரா :

நெல் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை தாராபுரத்தில் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலவைர் அவர்களே,

இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, எனது தொகுதியான தாராபுரத்திலும், காங்கேயம், வெள்ளக்கோயில் ஆகிய பகுதிகளில் அரிசி ஆலைகள் அதிக அளவில் உள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் நன்றாக செயல்பட்டு வருகின்றன. இந்த ஆலைகளிலிருந்து தவிடு பெருமளவில் கிடைக்கிறது. இதைத் தற்போது பெங்களூரிலிருந்து வியாபாரிகள் வந்து வாங்கிச் செல்கிறார்கள். தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை ஒன்று அமைத்தால், அது சிறப்பாக செயல்பட வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதைக் கனிவுடன் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் அரிசி ஆலைகளிலிருந்து தயாரிக்கும் அரிசியிலிருந்து பிரித்து எடுக்கின்ற அந்தத் தவிடுகள் எண்ணெய் உற்பத்தி செய்வதற்குத் தகுந்த தரமுள்ளதாக இல்லை. எனவேதான் அந்தப் பகுதியிலே தவிட்டு எண்ணெய் தயாரிக்கக் கூடிய தொழிற்சாலையை நிறுவுவதற்கு வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. துரை ராமசாமி

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம், காங்கேயம் தொகுதிகளில் எல்லாம் உற்பத்தியாகின்ற தவிட்டிலே எண்ணெய் இல்லை என்ற செய்தியை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கே உற்பத்தியாகின்ற நெல் தாராபுரத்தில் மட்டும் உற்பத்தியாவதில்லை தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு ஏற்ற

மாவட்டங்களிலிருந்து அங்கே நெல் கொள்முதல் செய்துதான் அரைத்து உமியை எடுக்கிறார்கள். ஆகவே அதிலே எண்ணெய் இல்லை என்கின்ற கருத்தை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நவீன அரிசி ஆலைகளை நிறுவினால் அவற்றிலிருந்து, அந்த நவீன ஆலைகளின் மூலம் அரிசியிலிருந்து பிரித்து எடுக்கப்படுகின்ற அந்த தவிடுகள் எண்ணெய் வாய்ப்பு உள்ள தவிடுகளாக அமைகிறது. எனவே, அப்படிப்பட்ட நவீன அரிசி ஆலைகளை அமைக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெல் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை தமிழகத்தில் எங்கெங்கு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குத் தனிக் கேள்வி போடவும். தாராபுரத்திலே ஆரம்பிப்பது பற்றியது இக் கேள்வி. நீங்கள் தமிழ்நாட்டிலே எங்கெங்கே இருக்கிறது என்று கேட்டால், அமைச்சர் எப்படிப் பதில் சொல்வார்கள்.

வினா எண். 626. திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர்.

626—

செங்கிப்பட்டி, பூதலூர் பகுதிகளில் தொழில்கள் தொடங்கி, வேலைவாய்ப்பளித்தல்.

* 5263—திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவையாறு தொகுதியைச் சார்ந்த செங்கிப்பட்டி, பூதலூர் பகுதிகள் மானாவாரிப் பகுதியாகவும் தொழில் வளம் இல்லாமல் இருப்பதால் அப்பகுதியில் தொழில்கள் தொடங்கி அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கிப்பட்டி, பூதலூர் பகுதியில் தொழில்கள் அமைப்பது குறித்த கோரிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.